

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் உதகையில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொறுப்பாளர் ராஜ௬ வரவேற்றார். இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் – நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் சாமிநாதன், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றினார்!

# நீலகிரி மாவட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்துவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! கே.எம்.ராஜு வரவேற்றார்!

நீலகிரி, மார்ச் 7-

நீலகிரி மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்துவோம் என்று தீர்மானிக்கப் பட்டது.

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவை தலைவர் போஜன் தலைமையில், திமுக உயர்நிலை செயல்டதிட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் தமிழக அரசின் தலைமை கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஸ்குமார் (கூடலூர்), கோவை திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா,ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத்அலி, பரமசிவன், காமராஜ், லாரன்ஸ், பிரேம்குமார், நெல்லை கண்ணன், பீமன், சிவானந்தராஜா,சுஜேஷ், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், இளஞ்செழியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, தொரை, பில்லன், ராஜேந்திரன், உதயதேவன், செல்வம், அமிர்தலிங்கம், ராஜா, மோகன்குமார், வீரபத்திரன், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜ், முத்து, சுந்தர்ராஜ், சஞ்சிவ்குமார், ரமேஸ்குமார், சுப்ரமணி, சின்னவர், காளிதாஸ், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, ராஜா, காந்தல் ரவி, எல்கில்ரவி, ராம்குமார், ராமசந்திரன், செல்வராஜ், ஆலன், விவேகானந்தன், ஆல்வின், செந்தில்நாதன், ஜெயந்தி, வெங்கடேஷ், சிவசுப்ரமணியம், ரஹமத்துல்லா, சீனி, சுரேஷ், அன்வர்அப்துல்லா, உமாநாத், ஜெயகுமார், செந்தில்நாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நௌபுல், பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, பரிமளா, சிவகாமி, சுசிலா, முன்னாள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, பேரூராட்சி தலைவர்கள் ஜெயகுமாரி, கௌரி, ஹேமமாலினி, சத்தியவாணி, ராதா, சித்ராதேவி, பங்கஜம், வள்ளி, பேபி மற்றும் தொமுச ஜெயராமன், நெடுஞ்செழியன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

கூட்ட முடிவில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மார்ச் 1ம் தேதி தனது 72வது வயதில் அடியெடுத்து வைத்துள்ளார்கள். நம் கழக தோழர்கள், தமிழக மக்கள் மட்டுமின்றி உலக தமிழர்கள் மிக எழுச்சியாக அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்று 4 ஆண்டுகளில் நாட்டு மக்களின் நலனிற்காக மட்டுமே தொடர்ந்து உழைத்து அறிவித்த திட்டங்கள் மூலம் இந்திய நாட்டிலுள்ள மற்ற மாநில முதல்வர்களு க்கெல்லாம் முதல்வராக திகழ்ந்து "நம்பர்ஒன் முதலமைச்சர்" என்கிற பெருமை பெற்றது கழகத்தின் ஒவ்வொரு தொண்டர்களுக்கும் பெருமைக்குரியதாகும்.

ஜனநாயகத்தை பாதுகாத்து, சமூக நீதியை நிலைநாட்டுவதில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் போராட்ட குனத்தையும் தன்னுள் அடக்கி சிறப்புடன் செயல்பட்டு வரும் நம் கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாள் சிழா நிகழ்ச்சிகளை நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகரஒன்றியபேரூர் மற்றும் கிளை கழக பகுதிகளில் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்து வது என தீர்மானிக்கப்படுகிறது.

2026 சட்டமன்ற தேர்தலில் நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, கூடலூர், குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றிப்பெற்று, கழக தலைவர் அவர்கள் தலைமையில் 7வது முறையாக தமிழகத்தில் கழக அரசு அமைந்திட ஒவ்வொரு கழக தோழர்களும் உறுதியேற்று தொடர்ந்து பணியாற்றுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகர - ஒன்றிய - பேரூர் கழக அமைப்புகளில் கழக செயல்வீரர்கள் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்தவது எனவும்,

கூட்டங்களில் அந்தந்த கழக அமைப்புகளுக்கு உட்பட்ட ஒவ்வொரு கழக நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் BLA2, வாக்குச்சாவடி குழுவினர் BLC, மற்றும் அனைத்து கழக செயல்வீரர்களை திரளாக கலந்துக் கொள்ள செய்து என திர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத்தலைவரும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்ற நிலையில், திருச்சி கருமண்டபத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று நந்தலாலாவின் திருவுடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மேயர் மு.அன்பழகன்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பொறியாளர் பரமேஸ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தருமபுரியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவினை தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுடன் உணவருந்தி உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். நிகழ்வில் தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது, தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் பி.தர்மசெல்வன், மாவட்ட கழக பொருளாளர் வே.தங்கமணி,ஒன்றிய கழக செயலாளர் டி.எல்.காவேரி, ஐ.டி.விங் உதயசூரியன்,அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் கலந்துகொண்டனர்.




திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர். இதில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்பட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு, மத்திய மாநகர பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார் ஏற்பாட்டில், தங்க மோதிரம், அணிவித்தார். அருகில் மாநகரச் செயலாளர் எஸ்பி. கனகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் பூவை ரமேஷ்பாபு, செயற்குழு உறுப்பினர் காலனி செந்தில், பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ராஜா, மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவிப்பு!

திருப்பூர், மார்ச் 7 -

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும். நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து. நிதிப்பகிர்விலும் பாரபட்சம் காட்டும். தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளர். துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் இன்று (7.3.2025 - வெள்ளி) மாலை 6.00 மணியளவில், தாராபுரம் தொகுதி - மூலனூர், பேருந்து நிலையம் அருகில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.



அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்டக் கழக பிரதிநிதிகள், துணை கழக அமைப்புகளின் இந்நாள், முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத்தின் செயல் வீரர்கள் மற்றும் இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் தவறாது பொது கூட்டத்தில் கலந்து கொள்வதோடு, பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை விநியோகித்தும், பொது மக்களும் இப்பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்து கொள்ளும் வகையில் இளைஞர் அணி. மாணவர் அணி நிர்வாகிகள் தக்க ஏற்பாடுகளை செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

# இராயபுரத்தில் குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை!

சென்னை, மார்ச் 7 -


இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறை சார்ந்த அதிகாரிகளுடன் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆலோசனை கூட்டத்தில் குடிநீர், கழிவுநீர் பிரச்சனைகள், சாலை பணிகள், துப்புரவு பணிகள் போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் பொதுமக்களுக்கு சரி செய்து கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் மாமன்ற உறுப்பினர் திருமதி. கீதா சுரேஷ் 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர். சுரேஷ்குமார், சென்னை மாநகராட்சி அதிகாரிகள் லோகேஷ், பிரபுதாஸ், சிவக்குமார், பிரபு, மலர்விழி பழனி, சூப்ப ர்வைசர், நந்தகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

**மார்ச் 7 (2015)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**